# 'புலிகளுக்குஎதிராகபோரிட புதியபடைதேவை' முன்னுள்படை அதிகாரிகள் டி.பி.க்குபரிந்துரை!

விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 35 திருவள்ளுவர் ஆண்டு 2024 மார்கழி 5 இதழ் 307
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 20-12-1993

(கொழும்பு)
விடுதலைப் புலிகளுக்கு எதிராக பேரா புரிவதற்கான நடவடிக்கையை ஸ்திரப்படுத்த வேண்டும் என்று முன்னாள் இராணுவ தளபதிகள் குழு ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கவுக்கு பரிந்துரை செய்துள்ளது.

அந்தக் குழு அதன் பரிந்துரையில் மேலும் தெரிவித்
(3-ம் பக்கம் பார்க்க)

## கிழக்கில் சூறாவளி அபாயம் நீங்கியது

(மட்டக்களப்பு)
கிழக்கு மாகாணத்தின் கரையோரப் பகுதிகளைச் சூறாவளி தாக்கக்கூடிய அபாயம் நீங்கிவிட்டதாக, வானிலை அவதான நிலையம் நேற்றிரவு அறிவித்தது.

இதேவேளை, அநுராதபுரம் பகுதியில் சகல குளங்களும்
(3ம் பக்கம் பார்க்க)

## மட்டு. மாவட்டத்தில் 30 ஆயிரம் குடும்பம் பாதிப்பு

(மட்டக்களப்பு)
மட்டக்களப்பு மாவட்டத்தில், வெள்ளத்தினால் சுமார் 30 ஆயிரம் குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. இவர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை
(3ம் பக்கம் பார்க்க)

### ● எதிரிக்கு காட்டிக்கொடுத்து

# தேசத் துரோகக் குற்றமிழைத்த 9 பேருக்கு மரண தண்டனை

## விடுதலைப் புலிகள் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)
அற்ப ஆசைகளுக்காக பொதுமக்களையும் எமது தேசத்தையும் எதிரிக்கு காட்டிக்கொடுத்து தேசத்துரோகக் குற்றமிழைத்த ஒன்பது பேருக்கு விடுதலைப் புலிகளால் மரணதண்டனை வழங்கப்படுவதாக புலிகளின் முக்கிய பிரமுகர் திரு. பொற்கோ நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்தார்.
(3-ம் பக்கம் பார்க்க)

## 9 பேரின் விபரம்

(யாழ்ப்பாணம்)
காட்டிக்கொடுப்புகள் மூலம் தேசத்துரோகக் குற்றமிழைத்த ஒன்பது பேரினது பெயர் விபரமும் அவர்கள் செய்த குற்றங்களும் வருமாறு:
(2ம் பக்கம் பார்க்க)

## தொண்டா பங்குபற்றவில்லை

(கொழும்பு)
ஐக்கிய தேசியக் கட்சியின் 39 ஆவது வருடாந்த மாநாட்டில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவரும், உள்ளூராட்சி சப்பண்டத்துறை கிராமிய கைத்தொழில்துறை அமைச்சருமான எஸ். தொண்டமான் கலந்துகொள்ளவில்லை என தெரிவிக்கப்பட்டது.

ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா தலைமையில் இந்த மாநாடு நேற்று முன்தினம் கொழும்பு சுகததாச உள்ளரங்கில் நடைபெற்றது. (இ)

## படகுச் சேவை நடைபெறுது

(யாழ்ப்பாணம்)
கிளாலி - பூநகரி படகுச் சேவை மழைகாரணமாக மறுஅறிவித்தல் வரை நடைபெறுதென தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறை அறிவித்துள்ளது.


விஜயரத்தின ஜெயரத்தின
(வயது 26)


பழனி தங்கவேல்
(வயது 36)


கந்தசாமி கலைச்சந்திரன்
(வயது 28)


செல்லர் சௌந்திரராஜன்
(வயது 24)


முருகுப்பிள்ளை சத்தியராஜா
(வயது 39)


வல்லிபுரம் சந்திரசேகரம்
(வயது 32)


மரியதாஸ் தேவதாஸ்
(வயது 43)


தியாகராஜா சண்முகநாதன்
(வயது 29)


சாமிவேல் ஆறுமுகம்
(வயது 37)

## விளம்பரம்

### நோவு வைத்தியம்

ஒட்டகப்புலம் சமதீர் நோவு எண்ணெ கிடைக்குமிடம் எஸ். ரீ. மெடிக்கல்ஸ், 490. ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (இ- 602)

### புதிய எழுத்தாளர்களே மகிழ்ச்சியான அறிவிப்பு!

புதிய எழுத்தாளர்களை ஊக்குவிப்பதற்கு "மீரா பிரசுரம்" ஒரு திட்டத்தை உருவாக்கி செயல்படுத்த இருக்கிறது. முழுவிபரம்: தாமரைச் செல்வி எழுதும் "தாகம்" நாவல் தொடர் நூற்றி ஒன்பதாம் பக்கத்தில். (இ-660)

## தட்டுப்பாடு நீங்கியது

(அரியாலை)

யாழ் — பரவையூர் உபதபால் நிலையத்தில் பெருமளவு முத்திரைகள் வந்துள்ளதால் முத்திரைக்கு இருந்த தட்டுப்பாடு நீங்கியுள்ளதாகத் தெரியவருகின்றது. —59

## பனை விதை நடுகை

(யாழ்ப்பாணம்)

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் பனை தென்னை வள அபிவிருத்திப் பிரிவினரால் மேற்கொள்ளப் பட்டுவரும் பனை நடுகைத் திட்டத்தின் கீழ், கொடிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் 5,600 பனை விதைகளை நாட்டியுள்ளது.

கச்சாய் அல்லாரை டொறின் பாலர் பாடசாலைக் காணியில் 100 விதைகளும், பாலாவியில் 2,500 விதைகளும், தெற்பவியில் 3,000 விதைகளும் நாட்டப்பட்டன.

## இராசிபலன்

20-12-1993

திங்கட்கிழமை

(தமிழுக்கு மார்கழி 05)

ஸப்தமி மாலை 4-59 வரை, பூரட்டாதி பின்னிரவு 2-11 வரை. மரணயோகம் இராகுகாலம், காலை 7-32 முதல் 9-02 வரை. சுபநேரம் மாலை 4-32 முதல் 5-32 வரை.

மேஷம்: கடின வாக்கு, கைம்பாவம், குடும்ப நன்மை.

இடபம்: இடம்பெயர்வு, சகோதரபாசம், பாராட்டு.

மிதுனம்: கடும் சினம், மக்கள் தொல்லை, அலைச்சல்.

கடகம்: பழிவாங்கல், தொழில் நஷ்டம், வெறுப்பு.

சிங்கம்: தொழில் லாபம், அதிக வேலைபழு, சுபகாரிய செலவு.

கன்னி: காரிய பலிதம், புதிய உறவு, உல்லாச பயணம்.

துலாம்: ஏமாற்றப்படல், அதிகாரிகள் துயர், மனவேதனை.

விருச்சிகம்: கருத்துமோதல், மன அமைதியின்மை, உடல் படல்.

தனுசு: அடிமை நிலை, தொழில் வெறுப்பு, காரிய தடை.

மகரம்: நம்பமுடியாத தகவல், வீட்டில் துயர், சுவை உணவு.

கும்பம்: சமயோசித புத்தி, கல்வியில் சிந்தனை, பணவரவு.

மீனம்: அன்னியர் உதவி, சமாதான பேச்சு, தெய்வீக செலவு.

—ஜோஸ்யர்.

## அத்வானி காவலிலிருப்பது ஒரு அரசியல் சித்திரவதை

(புதுடில்லி)

அயோத்தியா வழக்கில் பாரதீய ஜனதாக் கட்சியின் தலைவர் திரு. எல். கே. அத்வானியும் இதர தலைவர்களும் காவலில் வைக்கப்பட்டிருப்பது ஒரு அரசியல் சித்திரவதை என்று மேற்படி கட்சியின் தேசியக் கமிட்டி தெரிவித்துள்ளது.

புதுடில்லியில் இக்கட்சியின் கூட்டம் நேற்று மூன்தினம் நடைபெற்றது.

காவலில் வைக்கப்பட்டுள்ள தலைவர்களை விடுவிப்பதோடு அவர்களுக்கு எதிரான வழக்குகளை விலக்கிக் கொள்ள வேண்டும் என்று தமது கிளர்ச்சிப் போராட்டத்தை கட்சி தீவிரப்படுத்தும் என்று இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. (க)

## கோழிகளுக்கு புதுவித நோய்

(யாழ்ப்பாணம்)

கோழிகளுக்கு ஏற்பட்ட புதுவித நோயினால் பருத்தித்துறை, புலோலி கிழக்குச் சந்தா தோட்டப் பகுதியில் அதிகளவு கோழிகள் இறந்துள்ளன.

கோழிகளின் கண்களில் பெரிய கொப்புளங்கள் ஏற்பட்டு இரண்டொரு தினங்களில் இறக்கநேரிடுகிறது. -160

## கோப்பாயில் பனை நடுகை

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் பனை அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம் 2000 பனை விதைகளை நாட்டியுள்ளது.

கோப்பாய் கைதடி வீதி ஓரங்களிலும், இப்பகுதியில் உள்ள அணைக்கட்டுகளிலும் இவ்விதைகள் நாட்டப்பட்டன.

## வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை

மானிப்பாய்

(மானிப்பாய் பட்டினம், மானிப்பாய் கிராமம், பண்டத்தரிப்பு பட்டினம், பண்டத்தரிப்பு கிராமம்)

வரியிறுப்பாளருக்கு,

1987-ம் ஆண்டின் 15ஆவது இலக்க பிரதேசசபைகள் சட்டத்தின் 41ஆவது பிரிவின்கீழ்

1994-ம் ஆண்டிற்கான

### ஆதனவரி பற்றிய

# அறிவித்தல்-1994

1994ஆம் ஆண்டிற்கான ஆதனவரி கடந்த வருடாந்த மதிப்பீட்டின்படி அறவிடப்படும். தற்போது அமுலிலுள்ள ஆதனவரி அறவீட்டு விகிதமே எதிர் வரும் ஆண்டும் மாற்றமின்றி அமுல் செய்யப்படும். ஆண்டு முழுவதற்குமுரிய வரித்தொகையை ஜனவரி 31ஆம் திகதிக்கு முன் செலுத்துவோருக்கு 10% கழிவும், 1ஆம், 2ஆம், 3ஆம், 4ஆம் கந்தாயங்களுக்குரிய கட்டணத்தை முறையே ஜனவரி 31ஆம், ஏப்பிரல் 30ஆம், ஜூலை 31ஆம், ஒக்டோபர் 31ஆம் திகதிக்கு முன் செலுத்துவோருக்கு 5% கழிவும் வழங்கப்படும்.

1ஆம் கந்தாய வரி
மார்ச் 31ஆம் திகதிக்கு முன்பும்

2ஆம் கந்தாய வரி
ஜூன் 30ஆம் திகதிக்கு முன்பும்

3ஆம் கந்தாய வரி
செப்டம்பர் 30ஆம் திகதிக்கு முன்பும்

4ஆம் கந்தாய வரி
டிசம்பர் 31ஆம் திகதிக்கு முன்பும்

செலுத்தப்படல் வேண்டும். செலுத்தத் தவறும் வரியிறுப்பாளர்கள் மீது குடியிருப்பு ஆதனமாயின் 15%மும், வியாபார நோக்கத்திற்காகப் பாவிக்கப்படும் ஆதனமாயின் 20%மும் மற்றுமேச் செலவாக அறவிடப்படும்.

ஆகவே வரியிறுப்பாளர்கள் நிலுவையின்றி உரிய காலத்தில் பணத்தை செலுத்தி சபையுடன் ஒத்துழைக்குமாறு பணிவன்புடன் வேண்டப்படுகின்றீர்கள்.

மேலும் 1993ஆம் ஆண்டு முடிய மின்சார வரி நிலுவைகளையும் வியாபார உரிமக் கட்டணங்கள் மற்றும் வண்டி, துவிச்சக்கரவண்டி வரி என்பன வற்றையும் நிலுவையின்றி செலுத்துமாறும் கேட்டுக் கொள்கின்றேன்.

கா. சந்திரராசா,
விசேட ஆணையாளர்,
வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை,
மானிப்பாய்.

வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை,
தலைமைச் செயலகம்,
மானிப்பாய்,
16 – 12 – 1993. (ஏ-3670)

## ஒன்பது பேரின்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

★ பெயர்: விஜயரத்தின ஜெயரத்தின (வயது 23)

வேறு பெயர்: சனு

முகவரி: மவுன்கமல் வீதி, யாழ்ப்பாணம்

சிறிலங்கா இராணுவத்தின் மூன்றாவது கஜபாகு றெஜிமன்றில் செயல்பட்டவர். பின் அதிலிருந்து விலகி யாழ் வந்து யாழ்ப்பாணப் பெண் ஒருவரை திருமணம் செய்திருந்தார். அதன்பின் யாழ் போதனா வைத்தியசாலையில் பாதுகாப்பு ஊழியராக வேலையில் இணைந்து எமதியக்க முகாம்கள் பற்றியும் இயக்கத் தளபதிகள் பற்றிய தகவல்களையும் சிறிலங்கா அரசிற்கு அனுப்பிக் கொண்டிருந்தார். யாழ் போதனா வைத்தியசாலையில் குண்டுத் தாக்குதல் ஒன்றை மேற்கொள்வதற்கு பெரும் எடுப்பிலான திட்டமொன்றை தயார் செய்த சமயமே இவர் எம்மால் கைதுசெய்யப்பட்டார். இவரது தகவலின் அடிப்படையில் அதியுயர் சக்திவாய்ந்த C4 ரக வெடிமருந்து கைப்பற்றப்பட்டது.

★ பெயர்: பழனி தங்கவேல் (வயது 36)

வேறு பெயர்: புலவர், கண்ணாடி.

முகவரி: விஷ்ணு கோவில் வீதி, கண்டிவீதி மாங்குளம்.

இவரால் எம் முகாம்கள் காட்டிக்கொடுக்கப்பட்டு அவை விமானத் தாக்குதல்களுக்கு உள்ளாகியது. வவுனியா சென்றுவரும் மேலும் சிலரை தான் தொடர்புவைத்திருந்த இராணுவ உளவாளிகளுடன் தொடர்பு ஏற்படுத்தி அவர்களையும் காட்டிக்கொடுப்பவர்களாக மாற்றியுள்ளார். அத்துடன் புளொட் சமூகவிரோதக் கும்பலுடனும் இரகசியத் தொடர்பு வைத்திருந்தார்.

★ பெயர்: கந்தசாமி கலைச் சந்திரன் (வயது 28)

வேறு பெயர்: சந்திரன்

முகவரி: அராலிரோட், சங்கானை யாழ்ப்பாணம்.

இவர் வவுனியா சென்று வரும்போது இராணுவ உளவாளிகளுடனும் புளொட்சமூக விரோதக் கும்பல்களுடனும் தொடர்பை ஏற்படுத்தி எமது இயக்கம் பற்றிய தகவல்களை வரைபடங்கள் மூலம் வழங்கி வந்துள்ளார். இறக்குமதி தடை செய்யப்பட்ட பொருட்கள் கொண்டு வருவதற்கான அனுமதியையும் பெற்று பொருட்கள் கொண்டு வந்துள்ளார். முகாம்கள் பற்றிய விபரத்தையும் அதற்குரிய வரைபடங்களையும் எடுத்துச்செல்லும் போதுகைதுசெய்யப்பட்டார். இவர் முன்னர் குறிப்பிட்ட பழனி தங்கவேல் (புலவர்) மூலமாகவே இராணுவ உளவாளிகளுடன் தொடர்பை ஏற்படுத்தியிருந்தார்.

★ பெயர்: செல்லர் சௌந்திரராஜன் (வயது 24)

முகவரி: இல 7, மந்துவில் கிழக்கு, குடியிருப்புத் திட்டம் கொடிகாமம்.

இவர் வெளிநாடு செல்வதற்காக கொழும்பில் தங்கிநின்ற இளைஞர்களை புளொட் சமூக விரோதக் கும்பலுக்கு காட்டிக்கொடுத்து அவர்களை விடுதலை செய்வதற்காக பணம் சம்பாதித்துள்ளார். இதில் பலரைக் கைதுசெய்து பணத்தை பெற்றதன் பின்பு விடுதலை செய்துள்ளனர். இதைவிட அங்கு தங்கிநின்ற இளைஞர்களில்மேலும் சிலரை புளொட் சமூக விரோதக் கும்பலின் வாகனத்தில் அவர்களுடன் நேரடியாகச் சென்று கைது செய்துள்ளார். புளொட் கும்பலுடன் கொழும்பில் இவரிருந்த இவர்மேலதிக தகவல்களைப் பெறும்பொருட்டு யாழ்ப்பாணம் வந்த வேளையே கைது செய்யப்பட்டார்.

★ பெயர்: முருகுப்பிள்ளை சத்தியராஜா (வயது 39)

வேறு பெயர்: சத்தி

முகவரி: அக்கராயன் குளம் கிளிநொச்சி.

இவர் எமது ஆதரவாளர் போல் தன்னை இனங்காட்டிக் கொண்டு இராணுவ உளவாளிகளுடன் தொடர்பு வைத்து தகவல்களைக் கொடுத்து வந்துள்ளார் இராணுவபுலனாய்வு அதிகாரிகளுடன் சேர்ந்து மது அருந்தி அந்த மது போதைக்காகவே எமது பல முகாம்களை காட்டிக்கொடுத்துள்ளார்.

★ பெயர்: வல்லிபுரம் சந்திரசேகரம் (வயது 32)

வேறு பெயர்: சந்திரன்

முகவரி: 17ம் கட்டை வல்லிபுரம், முள்ளித்தீவு வீதி, புதுக்குடியிருப்பு

இவர் நான்கு முகாம்களைக் காட்டிக்கொடுத்துள்ளார். இதில் இரண்டு விமானத் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளது இராணுவ உளவுப்பிரிவுடன் தான் தொடர்பு வைத்தது மட்டுமல்லாமல் வேறு சிலரையும் தொடர்புபடுத்தியுள்ளார். சுன்னாகம் பகுதியில் ஒரு முகாமையும் இயக்கச்சிப் பகுதியில் எமது நிலைகளையும் வெவ்வேறு நாட்களில் உலங்கு வானூர்தியில் சென்று நேரடியாகக் காட்டிக்கொடுத்துள்ளார்.

★ பெயர்: மரியதாஸ் தேவதாஸ் (வயது-43)

முகவரி: பந்தினியம்மாள் குளம், வவுனியா.

இவர் வவுனியா சென்று வந்த வேளையில் இராணுவ உளவாளிகளுடன் தொடர்பை ஏற்படுத்திக்கொண்டு ஜோசப் இராணுவ முகாம் சென்று எமதியக்கம் பற்றியும் இயக்க முகாம்கள் பற்றியும் தகவல்களை தொடர்ச்சியாக வழங்கி வந்துள்ளார். எமது பிரதேசத்தைக் கைப்பற்றுவதற்கான இராணுவ நகர்வு நடவடிக்கைக்காக முன்கூட்டியே எமது நிலைகள் உள்ள பகுதிக்கு வந்து அவதானித்து எமது முன்னேற்பாடுகள் இல்லாத பகுதியின் ஊடாக இராணுவத்தினர் நகர உறுதுணையாக இருந்துள்ளார்.

★ பெயர்: தியாகராசா சண்முகநாதன் (வயது-29)

வேறு பெயர்: கட்டையன், செல்வா, கண்ணாடி, சரடி.

முகவரி: ஐயனார் வீதி, கல்வயல், சாவகச்சேரி.

இவர் வவுனியா சென்று வரும்போது இராணுவ உளவாளிகளுடன் தொடர்பை ஏற்படுத்திக்கொண்டார். இதன் மூலம் தடைசெய்யப்பட்ட பொருட்களைச் சன்மானமாக பெற்று முகாம்களின் அமைவிடங்களைக் காட்டிக்கொடுப்பதுடன் இயக்க உறுப்பினர்களின் செயற்பாடுகளையும் அறிந்து எதிரிக்குத் தெரியப்படுத்தி வந்துள்ளார்.

★ பெயர்: சாமிவேல், ஆறுமுகம் (வயது-37)

வேறு பெயர்: இரத்தினம்

முகவரி: மடுக்குளம், வேலங்குளம்.

இவர் வவுனியா சென்று வரும்போது புளொட் சமூக விரோதக் கும்பலுடனும் இராணுவத்துடனும் தொடர்பை ஏற்படுத்தித் தகவல்களை வழங்கிக் கொண்டிருந்தார். வடபகுதியில் நிரந்தரமாக நிலைகொண்டிருந்த முக்கிய உளவாளிகளுக்கும் சிறிலங்கா படையினருக்குமான தொடர்பாளராகவும் செயல்பட்டுள்ளார். —இ

## மலேரியாவால் பாதிப்பு

(ஆனைப்பந்தி)

தெற்பலி பண்டிதர் குடியிருப்பில் தற்போது மலேரியாக் காய்ச்சல் வேகமாகப் பரவி வருகின்றது.

குடியிருப்பில் உள்ள மக்களில் 40 வீதமானோர் இக் காய்ச்சலால் பீடிக்கப்பட்டுள்ளனர். —101

## தெருவிளக்கு பராமரிப்பு

(பண்டத்தரிப்பு)

வலி தென்மேற்கு பிரதேச எல்லைக்குள் தெரு விளக்குகளை அமைத்து பராமரித்து உதவுமாறு இப்பகுதியிலுள்ள சமய நிறுவனங்களுக்கும், பொதுநல அமைப்புக்களுக்கும் வலி தென்மேற்கு பிரதேசசபையின் விசேட ஆணையாளர் திரு. கா. சந்திரராசா வேண்டுகோள் விடுத்துள்ளார். —72

மணிவாக்கு

பிறரை ஏமாற்ற துணிந்து முயல்கிறோம். நமக்கே வலைந்திவலையை பின்னிவிடுகிறோம்

— ஸர் வால்டர் ஸ்காட்

# மட்டக்களப்பில் சுற்றிவளைப்பு அறுநூறு தமிழர்கள் கைது

(மட்டுநகர்)

மட்டக்களப்பு வேலட்டைக் கல்லாறில் கடந்த முதலாம் இரண்டாம் திகதிகளில் கடும் சுற்றிவளைப்பு நடத்தப்பட்டது.

இச்சுற்றிவளைப்பின் போது அறுநூறு பேர் வரை படையினரால் கூட்டிச்செல்லப்பட்டு பெரிய நீலாவணை ராணுவ முகாமிற்கு கொண்டுசெல்லப்பட்டு கடும் சித்திரவதை செய்யப்பட்டனர்.

மீண்டும் கண்டபடி தாக்கப்பட்டபின்னர் முகாமிலிருந்து விரட்டப்பட்டனர். மேலும் அப்பகுதிகளில் பகல் வேளையிலே மீன்பிடிக்க அனுமதிக்கப்படுகிறது. இரவில் மீன் பிடித்தால் சுடப்படுவர். இதனால் மீனவர்கள் வறுமையின் ஒருநேர உணவுடனே தமது வாழ்நாளைக் கழிக்கின்றனர்.

இங்குள்ள இளைஞர்கள் அனைவரும் தினந்தோறும் ராணுவ முகாமிற்கு சென்று கையொப்பமிட வேண்டும் என நிர்ப்பந்திக்கப்படுகின்றனர்.

மட்டு கிராணில் ஒரு இரவுக்கு இரண்டு தடவைக்குமேல் வீடுகள் சோதனையிடப்படுகின்றன என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ம சி)

# நமது நோக்கு

## பயனுள்ள மரங்கள்!

"எணை, இலுப்பெண்ணை என்ன விலை?" இது ஆச்சியிடம் கேள்வி.

"போத்தல் நூற்றிருபது ரூபாய்!" இது விடை.

"நல்லெண்ணை விலையை விட அதிகமாயிருக்கிறதே ஆச்சியை மடக்கி மலிவாக வாங்கும் முயற்சி!

"இப்ப இலுப்பை மரங்களையும் விறகுக்காகத் தறிக்கிறார்கள். இலுப்பம் விதை கிடைப்பதில்லை. விசயம் தெரிந்தவர்கள் என்ன விலை கொடுத்தும் வாங்குவார்கள். வேண்டாட்டிப் போ"!

இது சந்தையில் நாம் படிக்க வேண்டிய பாடம் என்ன?

விசயம் தெரிந்தவர்கள் என்ன விலை கொடுத்தும் வாங்குவதேன்? இலுப்பெண்ணையால் வாதம் போக்கலாம். பிண்ணாக்கினால் அரப்பினால் திரிதோஷமும் எண்ணைச்சிலேலும் நீங்கும்: இலுப்பம் பூவினால் பித்தசுரம் நீங்கும்: வித்தினால் விஷம் நீங்கும்: வேரினால் வயிற்றுக்கடுப்பு சரீர அயர்வு, அக்கினி மாந்தம்போன்ற பல வியாதிகள் நீங்கும்.

பரார்த்த குணசிந்தாமணியில் இச்செய்தி உண்டு. கர்ண பரம்பரையாகக் கேட்டுணர்ந்த பாட்டிமாரும், விசயமறிந்தவர்களும் மருத்துவத் தேவைக்காக இலுப்பெண்ணையை வாங்கி முருங்கையிலை இட்டுக் காய்ச்சி வடித்தெடுத்துப் பாதுகாக்கிறார்கள்.

விசயமறியாத இன்றைய சமுதாயம் கண்டபடி தறிக்கும் மரங்களில் இலுப்பையும் இடம்பெறுவதுவேதனை தருவதாகும்.

கலப்படச் "ஷாம்பூ"க்களைப் பாவித்து இளவயதிலேயே நரை, திரை மூப்புப் பெறும் காட்சிகளும் காணப்படுகின்றன. அரப்பின் மகத்துவத்தை மறந்ததினால்!

மழை தாராள மாகப் பெய்கின்றது. இந்தவேளையிற் பயனுள்ள மரங்களை நட்டுப்போற்ற பெருந்தகை மேம்பாட்டு நிறுவனம் எடுக்கும் முயற்சிகள் கிராமங்கள் தோறும் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்த வேண்டும்.

மரங்கள்நடுவது மாத்திரமல்ல அவற்றைப் பேணிக்காக்கப் பனை மட்டைகளையும் கொடுத்து வருகிறார்களாம்.

தடைகள் பற்றி நாம் கவலைப்பட்டுக் கொண்டிராது, கிராமியப்பொருளாதாரத்தில் அக்கறை செல்லவேண்டும்.

பாடசாலைகளிலே பாடநூல்களிலே பெறும் அறிவோடு பல பட்டறிவு விஷயங்களை பாட்டிமாரின் அனுபவச் செய்திகளையும் இன்றைய மாணவர் பெற்றிட வழிகாணப்படவேண்டும்!

★ கிழக்கு, மத்திய மாகாணங்களில்

# வெள்ளத்தில் சிக்கியவர்கள் ஹெலி, படகுகளால் மீட்பு

## விமான மூலம் உணவு விநியோகம்

(கொழும்பு)

மட்டக்களப்பு, அனுராதபுரம், பொலனறுவை மாவட்டங்களில் வெள்ளத்தில் சிக்கித்தவிக்கும் மக்களை மீட்கும் பணிகளில் ஹெலிகொப்டர் மற்றும் படகுகளும் ஈடுபடுத்தப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

பல இடங்களில் விமானம் மூலம் உணவுப் பொட்டலங்கள் போடப்பட்டு வருவதாகவும் அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இப்பகுதிகளில் பெய்துவரும் மழையை தொடர்ந்து ஏற்பட்ட வெள்ளப் பெருக்கில் நாற்பதாயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் தமது வீடுகளை இழந்துள்ளதுடன் பத்தாயிரம் வீடுகள் சேதமடைந்துள்ளன.

இம்மாகாணங்களிலுள்ள பல குளங்கள் உடைப்பெடுத்துள்ளதுடன் வீடுகள் மற்றும் வீதிகள் எங்கும் பெரும் வெள்ளம் நிரம்பி வழிவதுடன் வெள்ளப் பெருக்கினால் பல மரங்கள் சரிந்து விழுந்துள்ளதுடன் குடிசைகள் உட்பட பல வீடுகள் விழுந்துள்ளன.

வெள்ளம் வீதிகளை மேவிப் பாய்வதனால் பல இடங்களில் போக்குவரத்துத் துண்டிக்கப்பட்டுள்ளது பல இடங்களில் மின்கம்பங்கள் சரிந்தும் விழுந்தும் உள்ளதுடன் மின்வயர்களும் அறுந்துபோயுள்ளன.

வெள்ளத்தில் சிக்கியுள்ளவர்கள் மீட்கப்பட்டு பாதுகாப்பான இடங்களுக்கு அப்புறப்படுத்தப்பட்டு வருகிறார்கள். தொடர்ந்து இப்பகுதிகளில் மழை பெய்யும் சாத்தியங்கள் இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (சி-இ)

### கிழக்கில்

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

நிரம்பி வழிவதாகவும், அவை உடைப்பெடுக்கும் அபாயத்தில் இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. ம-இ

### மட்டு.மாவட்டத்தில்

1-ம் பக்கத் தொடர்ச்சி)

எடுத்துள்ளது.

இதற்கொத்த தேவையான பணத்தை ஒதுக்கீடு செய்யுமாறு, பிரதம மந்திரி ரணில் விக்கிரமசிங்க திறைசேரியைப் பணித்துள்ளார்.

மட்டக்களப்பில் உள்ள சகல பிரதேசச் செயலகப் பிரிவுகளிலும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. உடனடியாக வெள்ளத்தால் இடம் பெயர்ந்த மக்களுக்குச் சமைத்த உணவுகள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ம-இ

### புலிகளுக்கு எதிராக

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

திருப்பதாவது: தேசிய பாதுகாப்பு அமைச்சர் ஒருவர் நியமிக்கப்படவேண்டும். புலிகளுக்கு எதிராகப் போரிடக் கூடிய புதிய படை ஒன்றை ஏற்படுத்த வேண்டும்.

பூநகரி முகாம் தாக்குதலில் இராணுவம் தோல்வியுற்றதை கருத்திற் கொண்டு போராளிகளுக்கு எதிராகப் போரிட்டே ஆக வேண்டும் என்றும் முன்னாள் இராணுவ கப்பல் விமானப் படைத்தளபதிகள் அடங்கிய இந்தக் குழு தெரிவித்துள்ளது. (ம-இ)


இணுவையூர்

சிதம்பர திருச்செந்திநாதனின்

**வெட்டுமுகம்**

( சிறுகதைத் தொகுதி )

**வெளியீட்டு விழா**

இடம்:- கைலாசபதி கலையரங்கு யாழ் பல்கலைக்கழகம்

காலம்:- 20-12-1993 திங்கட்கிழமை (இன்று) மாலை 3-00 மணி

வரவேற்பு: திரு. த, குறிஞ்சிக்குமரன்

தலைமை:- திரு. புதுவை இரத்தினதுரை

வெளியீட்டுரை:- திரு. இ. முருகையன்

முதற்பிரதி பெறல்:- திரு. எஸ். பி. நடராஜா

மதிப்பீடு:- திரு. க. தணிகாசலம், செம்பியன் செல்வன், கலாநிதி சோ. கிருஷ்ணராசா

பதிலுரை:- இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

- விழாக் குழுவினர்

(இ-666)


## இன்று

(கொழும்புத்துறை)

சரசாலை நுணுவில் அருள்மிகு ஸ்ரீசிதம்பர விநாயகர் ஆலயத்தில் திருவெம்பாவைப் பூசை இன்று அதிகாலை மணிக்கு ஆரம்பமாகியுள்ளது. விசேட அபிஷேகம் பூசை ஆராதனைகளும் இடம்பெறுகின்றன. (154)

0 0

(கொழும்புத்துறை)

தொல்புரம் கொட்டியம்பதி அருள்மிகு முத்துமாரி அம்பாள் கோவிலில் இன்று திங்கட்கிழமை திருவெம்பாவை பூசை ஆராதனை வழிபாடுகள் என்பன நடைபெற்று தொடர்ந்து 16 தினங்கள் நிகழவுள்ளன. —154

0 0

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை கிழக்கு ஆதிசம்பதி அருள்மிகு ஸ்ரீ சந்திரசேகர விநாயகர் ஆலயத்தில் இன்று திங்கட்கிழமை அதிகாலை திருவெம்பாவைப் பூசை ஆரம்பமாகித் தொடர்ந்து 10 தினங்கள் இடம்பெறும்.

தினசரி காலை திருவாதவூரடிகள் புராண படலம் படித்தலும் பயன்சொல்லல் நிகழ்வும் நடைபெறும். -154

0 0

(பருத்தித்துறை)

பருத்தித்துறை சிவன் கோவிலில் இன்று திங்கட்கிழமை திருவாதவூரடிகள் புராணப் படிப்பு ஆரம்பமாகின்றன. இன்று திருவெம்பாவை பூசைகள் ஆரம்பமாகின்றன. 24 ம் திகதி சுவர்க்கவாயில் ஏகாதசி திருவிழாவும் நடைபெறும். -52

0 0 0

(வட்டுக்கோட்டை)

சித்தன்கேணி கலைநகர் மாதர் கிராம முன்னேற்றச் சங்கத்தினர் அறவழி மழலைகள் கல்விப்பூங்காவின் ஒன்பதாவது ஆண்டு நிறைவு விழாவையும் மாணவர் கௌரவிப்பு விழாவும் இன்று திங்கட்கிழமை நண்பகல் ஒரு மணியளவில் சங்க மண்டபத்தில் சங்கத் தலைவி திருமதி புஷ்பராணி சிதம்பரநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது. (109)

## ஒய்வூதிய கொடுப்பனவு

(ஆனைப்பந்தி)

புங்குடுதீவு நயினாதீவு பல நோக்கு கூட்டுறவுச்சங்க கிராமிய வங்கியல் ஒய்வூதியம் பெறுவோருக்கான டிசம்பர் மாதக் கொடுப்பனவு 21-ம் திகதி செவ்வாய்க்கிழமை தொடக்கம் அடைக்கலமாதா தேவாலயத்திற்கு அருகில் உள்ள மேற்படி சங்க கிராமிய வங்கியில் பணமாக வழங்கப்படும். -101

## எதிரிக்கு காட்டிக்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அங்கு அவர், ஸ்ரீலங்கா அரசின் நாசகாரச் செயல்களை நாம் விழிப்பாக இருப்பதன் மூலம் முறியடிப்போம்' எனும் தலைப்பிலான அறிக்கை ஒன்றையும் வெளியிட்டார். அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

ஸ்ரீலங்கா அரசானது தான் முன்னெடுக்கும் இராணுவ நடவடிக்கைகளில் அடுத்தடுத்து தோல்விகளை சந்திக்கும் அதேவேளை அரசியல் சூழலிலும் பல நெருக்கடிகளை எதிர் நோக்குவதால் தனது நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக தனது நாசகார கைக்கூலிகளின் செயற்பாடுகளை முடுக்கிவிட்டுள்ளது.

இவ்வேளையில் மக்கள் அனைவரும் மிகவும் அவதானத்துடனும் விழிப்புணர்வுடனும் செயற்பட்டு எம்மக்களையும் தேசத்தையும் காப்பாற்றுவதற்கு எதிரியின் திட்டமிட்ட நடவடிக்கைகளை முறியடிக்க வேண்டும்.

எமது மக்களின் தற்போதைய பொருளாதார நிலையை எதிரி தனக்கு சாதகமாக்கி அற்ப ஆசைகளை காட்டி ஏமாற்ற முற்படுகிறான். இவ்வாறான எதிரியின் ஏமாற்று வலைக்குள் வீழ்ந்து எதிரிக்கு துணைபோவதால் நாம் எம்மையே அழிப்பது மட்டுமல்லாமல் எமது வருங்கால சந்ததிகளையும் முற்றாக அழிக்க முற்படுகிறோம் என்பதை நினைவில் வைத்துக்கொள்ளவேண்டும்.

இதுபோன்ற அற்ப ஆசைகளுக்காக பொதுமக்களையும் தேசத்தையும் காட்டிக் கொடுத்து 'தேசத்துரோகக் குற்றமிழைத்த' ஒன்பது பேர் எம்மால் கைதுசெய்யப்பட்டனர். இவர்கள் மீதான தொடர் விசாரணையின்போது குற்றங்கள் நிரூபிக்கப்பட்டதன்பேரில் இவர்கள் ஒன்பது பேருக்கும் அதிக உயர் தண்டனையான மரணதண்டனை வழங்கப்படுகிறது.

இவர்கள் போன்று எம்மத்தியில் செயற்படுபவர்களை இனம் காணும் வகையில் உங்கள் வதிவிடங்களுக்கு அருகாமையில் அல்லது நீங்கள் சென்று வரும் இடங்களில் சந்தேகம் ஏற்படும் வண்ணம் நடமாடுபவர்கள் பற்றி நேரடியாகவோ அல்லது வேறு வழியாகவோ அறியும் விபரங்களை உடனடியாக அருகிலுள்ள இயக்க முகாம்களிலோ அல்லது கடிதம் மூலமோ தெரியப்படுத்துமபடி கேட்டுக் கொள்கிறோம் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவர்களின் காட்டிக் கொடுப்புகளால் பல தாக்குதல்கள், கோவில்கள், பாடசாலைகள், குடியிருப்புகள் மீது நடாத்தப்பட்டு அநியாயமாக மக்கள் உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளது.

தேசத்தை நேசிக்காவிடினும் தங்கள் குடும்ப எதிர்காலத்தைப் பற்றியாவது சிந்திக்காமல், பல மோசமான நடவடிக்கைகளில் இவர்கள் ஈடுபட்டுள்ளனர். இவ்வாறான செயல்களில் ஈடுபட்டவர்களது குடும்பத்தவர்கள் எமக்கு எழுதும் கண்ணீர் கடிதங்கள், அவர்களது நிலையை எமக்குத் தெரிவிக்கின்றன.

போராளிகளினதும், பொது மக்களினதும் அளப்பரிய இழப்புக்களால் இந்தத் தேசத்தை நிர்மாணிக்க மேற்கொள்ளப்படும் திட்டங்களை இவ்வாறான செயற்பாடுகள் அர்த்தமற்றதாக்கிவிடும் எனவும் திரு. பொற்கோ தெரிவித்தார். -இ

